**மதவாச்சி பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மதவாச்சி பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் ' உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.
இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதவாச்சி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட 2019’02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 01 இல் உள்ளவாறு அறிக்கை திகதியில் உள்ளவாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் பெறுமானத் தேய்வுக் கொள்கை நிதிக் கூற்றுக்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக்கொள்கின்றேன். | அறிக்கை திகதியில் காணப்படும் சொத்துக்கள் பெறுமானத் தேய்வுக் கொள்கை நிதிக் கூற்றுக்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புறநெகும வர்த்தக கட்டிட தொகுதிக்காக 2019 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய கடை வாடகை ரூபா 2,595,432 தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்காமல் மீளாய்வாண்டின் வருமானமாக காண்பித்தமையால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் அதிகரித்திருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | முன்னைய காலப்பகுதிக்குரிய சீராக்கங்கள் திரண்ட நிதியத்தில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் கடைசி 03 மாதங்களுக்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 371,830 தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்காமல் மீளாய்வாண்டின் வருமானமாக நானாவித வருமானக் கணக்கில் செலவு வைத்தமையால் மீளாய்வாண்டின் வருமானம் அப் பெறுமானத்தினால் அதிகரித்திருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். | முன்னைய காலப்பகுதிக்குரிய சீராக்கங்கள் திரண்ட நிதியத்தில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | பொது செயற்பாடுகளுக்காக பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 11,513,000 பெறுமதியான 14 பேர்ச் காணி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 6,333,388 பெறுமதி 35 மதகுகள் நிதிக் கூற்றுக்களில் மீண்டெழும் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். | மதகுகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய அறிவித்தல் பதாதை வருமானம் ரூபா 240,725 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை | ஏற்றுக்கொள்கிறேன். | மதகுகளின் பெறுமதி மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சரளைக் கற்கள் வீதி நிர்மாணத்திற்காக | ஏற்றுக்கொள்கிறேன். | சரளைக் கற்கள் வீதி நிர்மாணம் மீண்டெழும் |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 29,161,495 ஆன மீண்டெழும் மானியம், விரிவான வருமானக் கூற்றில் மீண்டெழும் அல்லாத மானியமாக கணக்கீடு செய்தமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தினால் அதிகரித்திருந்தது. | | செலவினமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 3,252,323 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தேவையான கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் 2008 ஜனவாரி 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமல் சியம்பலாகஸ்கட மற்றும் முஸ்லிம் ஹல்மில்லேவ ஆகிய மாடுகள் கொல்லப்படும் இடங்கள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன | ஏற்றுக் கொள்கிறேன். | சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 இன் ஆகஸ்ட் 23 ஆந் திகதிய உப விதி வர்த்தமானி அறிவித்தலின் 32 ஆவது உப விதியின் 09 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் மாடுகள் கொல்லுமிடங்களில் மிருகங்களை பரீட்சித்தல் மற்றும் இலட்சிணையிடல் என்பவற்றிற்காக அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் பொது சுகாார பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட்டு இறைச்சி பரீட்சித்தல் மற்றும் இலட்சிணையிடல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதற்காக அறவிட வேண்டிய ரூபா 1,042,660 ஆன கட்டணங்கள் அறவிடப் பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-------------------.

### 2.1 நிதி விளைவுகள்

--------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 35,673,108 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,093,356 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

----------------------------------

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 2,052,214 ஆன நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ரீதியான அடிப்படையில் தயாரிக்கப்பட்டதன் பின்னர் நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

-----------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பெறவேண்டிய ரூபா 11,112,436 ஆன கடை வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்துரைக்கப்பட்ட திகதியில் கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

-------------------------------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 594,900 ஆன வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு கிடைத்திருந்த புறநெகும புதிய வியாபார கடை தொகுதிக்காக 03 ஆண்டுகளுக்காக கிடைத்திருந்த ரூபா 6,803,877 ஆன வைப்புக்கள் 02 ஆண்டுகளுக்கு மிகைத்த காலமாக விளைவற்ற வகையில் அரச வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01-20 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் தற்போது சபையில் சேவை புரியாத நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 346,100 ஆன ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் (LDSP) கீழ் வீதி செயற்திட்டமொன்றிற்காக ஒதுக்கீடு செய்த ரூபா 7,900,000 ஆன நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 3,478,300 ஆன தொகை அச்செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தாமல் LDSP கணக்கில் விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தது. | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூலம் இச்செயற்திட்டத்தினை செயற்படுத்தியமையால் இந்நிதி அச் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில் லை. | நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யும் போது குறித்த செயற்திட்டத்தின் உரித்து எந்த நிறுவனத்திற்கு என்பது தொடர்பாக தெளிவாக இனங்காணப்பட வேண்டும். |